# கந்தகெட்டிய சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 05 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கந்தகெட்டிய பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீளாய்வாண்டின் பங்களிப்பான ரூபா 33,280 தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 807,163 தொகைகளுக்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 33,280 தொகை குறைவாகவும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 840,443 தொகை அதிகமாகவும் கடன்கொடுத்தோர் ரூபா 840,443 தொகை குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 327,964 ஆகும்.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12:5:1 ஆம் உப பிரிவின் பிரகாரம் சபைச் செயலாளர் பதவியில் பதில் கடமைப் பதவிக்காக பதில் கடமைச் சம்பளம் கணிப்பீடு செய்து செலுத்த வேண்டியிருந்த உத்தியோகத்தருக்கு தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12:5:4 ஆம் பந்தியின் பிரகாரம் பதில் கடமைச் சம்பளம் கணிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால் 2011 யூலை மாதம் தொடக்கம் 2012 செப்தெம்பர் மாதம் வரையான காலத்திற்காக ரூபா 57,881 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

(அ) 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக சனசமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது அந்தச் சங்கங்களுக்கு ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்குள்ள இயலுமை மற்றும் நிதி வசதிகள் தொடர்பாக பிரதேச செயலாளரினை உள்ளடக்கிய குழுவின் மூலம் உறுதிப்படுத்தப்படுத்தப்படாமல் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 1,564,699 பெறுமதியான 03 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஊவா மாகாண விவசாய, கமநல அபிவிருத்தி, விலங்கின உற்பத்தி நன்னீர் மீன்பிடி சுற்றாடல் மற்றும் சுற்றுலா அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 182,284 தொகை செலவிடப்பட்டு லொக்கல்ஓய அருகில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு தற்காலிக தங்குமிடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வகையில் அழிவடைந்திருந்தமை 2013 மார்ச் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 2.5 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) 2007 ஆம் ஆண்டின் போது இடர் முகாமைத்துவ நிலையத்திலிருந்து சபைக்கு வழங்கப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் 2011 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து செயற்பாடின்றின் காணப்பட்டதுடன் அதனை பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் சபை வளவில் செயற்பாடற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் ரூபா 77,052 பெறுமதியான 22 காசோலைகளை வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டில் 14 சந்தர்ப்பங்களின் போது எரிபொருள் படிக்காக வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 201,959 தொகை 2013 மார்ச் மாதம் வரையிலும் இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சபையில் சேவையாற்றுகின்ற அமைய / நாட்கூலி ஊழியர்களுக்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட பங்களிப்புப் பணமான ரூபா 422,499 தொகை அந்த நிதியத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டிற்காக சபையினால் கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கொள்வனவுத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் தயாரிக்கப்பட்ட பிரஜைகள் சாசனம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் பிரதேச சபையின் மூலம் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற துண்டுக் குப்பைகள் இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் போடப்பட்டிருந்தது.